பக்கங்கள்:12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 16 ஞாயிற்றுக்கிழமை 30.03.2025 கதிர் 142

## இது ரகசியம் அல்ல!

தேசிய மக்கள் சக்தியினரின் வாக்குறுதிகளுக்குச்சாவே இல்லைப் போலும். உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டியும் அவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசத் தொடங்கிவிட்டார்கள். ஏற்கனவே வீசப்பட்ட வாக்குறுதிகளுக்குஆட்சிக்கு வந்த பின்னர் வழக்கம்போலவே வியாக்கியானங்கள் சொல்லி வரும் நிலையில் இப்போது புதிய வாக்குறுதிகள் ☞ 2

# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்கமுடியாது

## படிப்படியாகப் பார்க்கலாம் என்கிறார் அமைச்சர் பிமல்

அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால் அதனை உடனடியாக செய்ய முடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள்தான் கடந்துள்ளன. எனவே படிப்படியாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா, குடியிருப்பு பகுதியில் நேற்று சனிக்கிழமை தேசிய மக்கள் சக்தியின் ஊள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின் செய்தியாளர்களிடம் பேசியபோது ☞ 2



## இளைஞர்களிடம் 'எய்ட்ஸ்' நோய்ப் பரவல் அதிகரிப்பு

உயிராபத்து மிக்க எய்ட்ஸ் நோயைப் பரப்பு எ.ஐ.வி. கிருமித் தொற்று இலங்கை இளைஞர்களிடையே அதிகரித்து வருகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட 115 பேருக்கு ☞ 8

## தபால் வாக்குகளை அச்சிடும் பணிகள் இறுதிக் கட்டத்தில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அரசஅச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 5 ஆம் திகதிக்குள் வாக்குச் சீட்டுகளை தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச்சக பணிப்பாளர் பிரதீப் ☞ 8

## இந்திய பிரதமர் மோடியை காப்பது எமது நோக்கமல்ல

### அமைச்சர் சந்திரசேகரன் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

இந்திய இலங்கை மீனவர் பிரச்சினையில் எனது வேலை எமது மீனவர்களைப் பாதுகாப்பதே தவிர, இந்தியாவைக் காப்பாற்றுவதோ அந்த நாட்டின் பிரதமர் மோடியை காப்பாற்றுவதோ அல்ல என அமைச்சர் சந்திரசேகரன் நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியப்பிரதம ☞ 2

## ஆனையிறவு உப்பின் பெயருக்கான அடையாளத்தை உறுதிப்படுத்துங்கள்

### அமைச்சர் ஹந்துநெத்திக்கு சீறிதரன் எம்.பி. கடிதம்

ஆனையிறவு உப்பு என்னும் அடையாளப் பெயரை உறுதிசெய்யுமாறு கோரி, நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ☞ 8

## போராட்டங்கள் ஊடாக ஆட்சியை பிடித்தவர்கள் இன்று போராட்டங்களை விரட்டியடிக்கின்றனர்

### ஆளும்தரப்பை போடுத் தாக்குகிறார் எதிர்க் கட்சித் தலைவர்

எதிர்க்கட்சியில் இருந்தபோது போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் முன்னெடுத்த இந்த ஆளும்தரப்பினர் ஆட்சிக்கு வந்த பின்னர் போராட்டங்களை விரட்டியடித்து தாக்க ஆரம்பித்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு ☞ 8

## அரச சொத்துக்கள் தேர்தலுக்கு பயன்படுவதை தடுத்து நிறுத்துக

### பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

தேர்தல் பரப்புரைகளின்போது அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம். மாறாக ஏதேனுமொரு தரப்பினர் தேர்தல் சட்டங்களுக்கு எதிராகச் செயற்பட்டால் அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த தேர்தல்களைப் போன்று இம்முறைத் தேர்தலிலும் ☞ 8

## "நான் ஒரு அப்பக் கோப்பையல்ல" இளங்குமரன் எம்.பியின் பரிதாபம்

இலங்கையின் வலுசக்தி அமைச்சர் கலந்துகொண்ட கூட்டத்தில் மின்சாரம் தடைப்பட்டமை தொடர்பில் தகவலை வெளிபடுத்திய ஊடகவியலாளர்களைப் பார்த்து, மின் தடை அந்த இடத்தில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டது என்ற ரீதியில் "நான் ஒன்றும் அப்பக் கோப்பையல்ல" என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சீறிச் சினந்த சம்பவம் நேற்று மாலை பதிவானது. பின்னர் உண்மையிலேயே மின்சார சபையினால்தான் அந்த மின் தடை ஏற்பட்டது என்று உறுதிப்படுத்திய பின்னர், "தெரியாமல் சொல்லிவிட்டேன்" என்று ஊடகவியலாளர்களைச் சமாளித்தார்.

யாழ்ப்பாணம் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இலங்கை புத்திஜீவிகள் அமைப்பின் கலந்துரையாடல்



ஒன்று இடம்பெற்றது. மீன்பிடித்துறை அமைச்சர் அமைச்சர் சந்திரசேகரன், வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, டிஜிட்டல் பொருளாதார பிரதி ☞ 8

## தேசபந்து தலைமறைவாக உதவிய கான்ஸ்டபிள் உட்பட இருவர் கைது

நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன், சரணடைவதற்கு முன்னதாகத் தலைமறைவாக இருப்பதற்கு உதவினார் என்கிற குற்றச்சாட்டில் பொலிஸ் சிறப்புப் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு குற்றப் புலனாய்வுத் துறையினரால் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

தேசபந்து தலைமறைவாகியிருக்க பெப்ரவரி 27 முதல் மார்ச் 19 வரை இவர்கள் இருவரும் வசதிகளும் ஆதரவும் வழங்கியிருந்தனர் ☞ 2

## உள்ளாட்சி மன்ற அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்திக்கே தாருங்கள்

### ஜனாதிபதி அநுர மக்களிடம் வேண்டுகோள்

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கே பெற்று தரவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

தேசிய மக்கள் சக்தியின் 'வெற்றி நமதே- ஊர் எமதே' என்ற மக்கள் பேரணித் தொடர் நேற்று சனிக்கிழமை பெலியத்த பிரதேசசபை மைதானத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## வளமான நாட்டை உருவாக்கும்

# தொலைநோக்கோ திட்டங்களோ இந்த ஆளும்தரப்பிடம் இல்லை

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

வளமான நாட்டை உருவாக்குவோம் என்றுகொள்கைப்பிரகடனத்தை முன்வைத்த தேசிய மக்கள் சக்திக்கு நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைக்கூட பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டை ஆள்வதற்கான தொலைநோக்குப் பார்வையோ, வேலைத்திட்டமோ இந்த ஆளும்தரப்பிடம் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத்தேர்தலைஇலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர்களுடன் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாட்டின் சுகாதாரத் துறையில்மருந்துப்பொருள்மோசடி,கொள்ளை போன்ற பல பிரச்சினைகள் காணப்பட்டன. தரம் குறைந்த மருந்துகளால் பலரின் உயிர்கள் பறிபோனது. இன்றும் கடுமையான மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதற்கு ஆளும்தரப்பிடம் தீர்வில்லை. இதற்கான ஏற்பாடுகளைக்கூடக் காண்பதற்கில்லை.

ஆஸ்துமா நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றும் மருந்து, நுரையீரல் தொற்றுக்கு வழங்கப்படும் மருந்து, நிமோனியா நோயாளிகளுக்குவழங்கப்படும்ஆன்டிபயாடிக் மருந்துகள், தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளிகளுக்கும் பாக்டீரியா தொற்றுக்கான நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து என்பவற்றுக்குக் கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் மக்கள் ஆணை வழங்கி, 225 பேரில் 159 பேரோடு பெரும்பான்மை அதிகாரத்தையும் வழங்கியது இப்படி மருந்துத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கல்ல . மக்களின் உயிரைக் காப்பாற்றும் மருந்துப் பொருட்களுக்கு இவ்வாறு கடும் தட்டுப்பாடு நிலவி வரும் இவ்வேளையில், ஆளும்தரப்பு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

வளமானநாட்டைஉருவாக்குவோம்என்று கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தனர். ஆனால் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளைக்கூட பெற்றுக் கொடுக்க ஆளும்தரப்பால் முடியவில்லை. என்பதுதான் உண்மை. நாட்டை ஆள்வதற்கான தொலைநோக்குப் பார்வையோ, வேலைத்திட்டமோ, பாதை வரைபடமோ இந்த ஆளும்தரப்பிடம் இல்லை. நாட்டை நிர்வகிக்க முடியாத, இயலுமையற்ற ஆளும்தரப்பே தற்போது காணப்படுகின்றது.

வேலையில்லாப் பட்டதாரிகள் வேலை கேட்கும்போதுஅமைச்சர்கள்அவர்களைக்கேலி செய்கிறார்கள். தற்போதைய ஆளும்தரப்பின் வெற்றிக்கு உதவிய வேலையற்ற பட்டதாரிகள் இறுதியில்வைத்தியசாலைசெல்லும்அளவிற்கு ஆளும்தரப்பின் அடாவடித்தனம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பின்னராவது இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்றார்.

## இனி இது .....

கரைபுரண்டோடத் தொடங்கியுள்ளன.

மூன்று முதல் நான்கு ஆண்டுகளில், பிராந்தியத்தில் மிகக் குறைந்த மின்சாரக் கட்டணங்களைக் கொண்ட நாடாக இலங்கை மாறும் என்று ஜனாதிபதி நேற்று ஒரு பரப்புரைக் கூட்டத்தில் வாக்குறுதியளித்தார். ஏற்கனவே தாம் ஆட்சிக்கு வந்ததும் 30 சதவீதத்தால் மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பதாக வழங்கிய வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை என்றாலும் அடுத்த வாக்குறுதியை வழங்குவதற்கு அவர் தயங்கவில்லை.

பெலியத்தயில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது பேரணியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த வாக்குறுதியைத் தந்தார்.

'நாட்டை திவாலாக்கியவர்கள் மீண்டும் அரசாங்கங்களைஅமைக்கவருகிறார்கள். யார் வேண்டுமானாலும்கனவுகாணலாம். அவை வெறும் கனவுகள்தான். அவை ஒருபோதும் நிஜமாகாது' என்றும் கொக்கரித்தார்.

அதுமட்டுமல்ல மே மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான சர்ச்சைக்குரிய வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என்றும் ஜனாதிபதி அங்கு கூறினார். அதாவது முன்னாள்அமைச்சர்கள், ஆட்சியாளர்களுக்கு எதிராக வழக்குகள் பாயும் என்பதுதான் அவர் கோடிகாட்டிய விடயம்.

வலுவானவழக்குப்பதிவுசெய்துவழக்கை விசாரித்த பிறகு குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்றும் கூறினார். இதுவரை மூன்று முன்னாள் அமைச்சர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் எனக் கூறிய ஜனாதிபதி, இன்னும் சிறிது காலத்தில் சிறையிலேயே அத்தகையவர்களால் நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியும் என்றும் கிண்டலடித்தார். அதாவது அவ்வளவு பேரைக் கைது செய்து உள்ளே தள்ளப்போகிறோம் என்று சொல்லாமல் சொல்கிறார்.

அவர் பதவிக்கு வந்து 6 மாதங்களிலும் அவரது ஆளும்தரப்பு பதவிக்கு வந்து 4 மாதங்களிலும் ஊழல், முறைகேடு தொடர்பில்எடுக்கப்பட்டிருக்கும்உருப்படியான நடவடிக்கைகள் என்ன என்றும், மத்திய வங்கி பிணை முறி ஊழல், சீனி ஊழல் உட்பட தேசிய மக்கள் சக்தியினர் வசமிருந்த நூற்றுக்கணக்கான இலஞ்ச, ஊழல் கோவைகளுக்கு என்ன நடந்தது என்றும் மக்கள்கேள்விகேட்டுக்கொண்டிருக்கும்போது, அரசியல்வாதிகளைக் கைது செய்யது சிறையில் அடைப்பார் என்பதாக நாசூக்காக நக்கல் கதை பேசுகின்றார் ஜனாதிபதி.

அவர் சொல்வது அவரது ஆட்சி முடிவதற்குள்ளாவது நடந்தால் மக்களுக்கும் மகிழ்ச்சிதான்.

.........................................

அரசியல்வாதிகளுக்குச் சிறை ஒரு தண்டனைக்களமாஅல்லதுஓய்வுவெடுக்கும் இடமாஎன்பதுகேள்விக்குரியதுதான்.ஏனெனில் சிறையில் உள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு ஏற்கனவேமூன்றுவேளையும்வீட்டிலிருந்தே நல்ல உணவு வருகின்றது. விளக்கமறியல் கைதிகள் அப்படி உணவைப் பெற ஏற்பாடு இருக்கின்றது என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், மற்றைய ஏழைக் கைதிகள் பாவம், ஏற்பாடுகள் இருந்தாலும் அவர்களால்சிறைக்குநாளாந்தம்உணவைத் தருவிக்கும்வசதிகள்கிடையாது. ஆனால்உயர் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விருந்தே கிடைக்கின்றது.

தேசபந்து தென்னக்கோனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவும தனக்கும் வீட்டிலிருந்தே உணவு கொண்டுவர அனுதிக்குமாறுஎழுத்துபூர்வமாகக்கோரிக்கை விடுத்துள்ளாராம். கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவரும்மூன்றுவேளையும்வெளியிலிருந்து உணவு எடுத்துவர அனுமதிக்கும்படி கேட்டுள்ளாராம்.

சிறைச்சாலையில் இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'எம் வார்ட்' பகுதியில்தான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலஞ்ச ஊழல் முறைகேட்டுக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளவருமான வியாழேந்திரனும்தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அவர் இனி எப்போது நாளாந்தம் வெளிச் சாப்பாடுதான்வேண்டும்என்று அடம்பிடிப்பார் என்று தெரியவில்லை.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழ் அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பட்டலந்த வதை முகாம் மட்டுமல்ல பல வதைமுகாம்கள் இருந்தன. அவைதொடர்பில் விசாரணைகள் நிச்சயம் முன்னெடுக்கப்படும். அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களே கடந்துள்ளன.

ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் அதனைப் படிப்படியாக அதற்கான செயன்முறைகள்ஊடாகத்தான்செய்யமுடியும். காணிகள்உடனடியாகவிடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின் கைத் தொழிற்சாலைகளை மீள இயங்கு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம்.

வரவு செலவுத் திட்டத்தில் கூட முன்னைய அரசாங்கங்கள் ஒதுக்காத அளவு அதிக நிதியை நாம் வடக்கிற்கு ஒதுக்கியுள்ளோம். 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியல் படலந்த வதை முகாம் மாதிரி பல வதை முகாம்கள் இருந்தன. இவ்வனைத்து முகாம்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறான வதை முகாம்களால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். சகல பிரச்சனைகளையும் உடனடியாக விசாரிக்க முடியாது. படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு இந்த நாட்டில் நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும் என்றார்.

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரின்இலங்கைவருகைகுறித்துசெய்தியாளர்கள் அவரிடம்கேள்விஎழுப்பினர். பதிலளித்தஅவர், மீனவர் பிரச்1னை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார இந்தியப் பிரதமருடன் கலந்துரை யாடுவார் என்று தெரிவித்தார்.

"இந்தியப்பிரதமரின் வருகை வெறுமனே மீனவர்களின் பிரச்சனையுடன் மட்டும் வரையறுக்கப்பட்டஒன்றல்ல. இந்தியாவுக்கும் எமக்கும் எந்தவித பகையும் இல்லை. இந்திய மீனவர்களுக்கும் எமக்கும் எந்தவித கோபங்களும் இல்லை.

இந்திய மீனவர்கள் தடைசெய்யப்பட்ட இழுவை மடிகளைப் பயன்படுத்தி தொழில்செய்துதான் ஏற்புடையதல்ல. வடக்கில் உள்ள கடல் வளத்தை முற்றாக அளிக்கும் செயல் இது. இந்த நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் இன்னும் பத்து பதினைந்து வருடங்களில் எமது கடல் பாலைவனமாக மாறுவதை தவிர்க்க முடியாது. இதனை யாரும் அனுமதிக்க முடியாது.

எனது வேலை இந்திய அரசைப் பாதுகாப்பதோ, இந்தியத் தூதுவரைப் பாதுகாப்பதோ, இந்தியப் பிரதமரைப் பாதுகாப்பதோ அல்ல. எமது மீனவர்களைப் பாதுகாப்பதே. அந்த வேலையை சரிவர நான் செய்கின்றேன் என்று நான் நம்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## தேசபந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று போலீஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்ட மற்றைய சந்தேகநபர் தலவத்துகொட பகுதியைச் சேர்ந்தவர். சாந்திபுர, கினி தோட்ட பொல் வட்டகேயில் வாழும் சுரங்க சஞ்சீவ வீரசூரிய என்ற கோடீஸ்வர தொழிலதிபர்.

தேசபந்து தென்னக்கோன் தலைமறைவாக இருந்த காலத்தில் அவர் மறைந்து பயணிப்பதற்கு சந்தேகநபரான தொழிலதிபர் தனது மோட்டார் வாகனத்தைக் கொடுத்திருந்தார் என்பது தெரியவந்ததை அடுத்து, குற்றப் புலனாய்வுத் துறையினர் சந்தேகநபரை விசாரணைக்காக இரண்டு முறை அழைத்திருந்தனர். பின்னர், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்,

கைதானதை அடுத்து நோய்வாய்ப்பட்ட அவர் உடனடியாக தலவதுகொட பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். அதற்கிடையில் அவரது உடல் நிலையை முன்வைத்து மாத்தறை நீதிவான் நீதிமன்றில் பிணைக்கு விண்ணப்பிக்கப்பட்டது. மாத்தறை நீதிமன்றம் கடுவெல நீதிவானிடம் விடுத்த கோரிக்கையின் பேரில், பதில் நீதிவான் கமல் பிரசன்ன விஜேசிறி, சந்தேகநபர் சிகிச்சை பெற்று வந்த தலவத்துகொட தனியார் மருத்துவமனைக்குச் சென்று சந்தேகநபரைப் பரிசோதித்தார். அவரது அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றம் தொழிலதிபருக்குப் பிணை வழங்கியுள்ளது

குற்றப் புலனாய்வுத் துறையின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

அரசியலிலும் பொருளாதாரத்திலும் திருப்பத்தை ஏற்படுத்த நாட்டு மக்கள் புதிய ஆளும்தரப்பு ஒன்றைத் தோற்றுவித்தனர். ஆனால் ஆளும்தரப்புக்கு எதிராக ஒரு சிறு குழுக்கள் விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தத் தரப்பினர் இங்குள்ள கிராமங்களுக்கு வருகை தருகின்றனரா? இல்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள்? தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்து கொண்டு உரையாற்றி கொண்டிருக்கிறார்கள்.

விவசாய அமைப்புகளின் தலைவர்களும் அதில் இருக்கிறார்கள்.ஆனால் அவர்கள் விவசாய நிலங்களில் இறங்குவதில்லை. அரசியல்வாதிகள் தமது வாழ்நாளில் இவ்வாறான மோசமாக தோல்வியைச் சந்திப்பார்கள் என சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அதன் வெளிப்பாடு தற்போது வேதனையாகவும் கோபமாகவும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் தொலைக்காட்சியில்இந்தளவுபுலம்புகிறார்கள் என்றால்வீட்டில்தனிமையில்இருக்கும்போது அவர்களது நிலைமை எவ்வாறு இருக்கும் என நான் நினைத்துபார்த்தது உண்டு.

ஆளும்தரப்பு என்றால் என்னவென மக்களுக்கு இந்நாட்டில்நாம்முன்னுதாரணம் காட்டி வருகிறோம்.எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை மக்கள் மீண்டும் தவற விட மாட்டார்கள்.

நாம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டுவருகிறோம். இதற்கு முன்னர் எமது நாட்டின் அரசியலில் என்ன நடந்துள்ளது. ஊழல்மோசடிநிறைந்ததாகவேகாணப்பட்டது. ஆனால் பல தசாப்தங்களுக்குப் பின்னர் இந்த நாட்டில் ஊழல் மோசடி இல்லாத மக்கள் சார்பான ஆளும்தரப்பு ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நாம் மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கவில்லை என எம்மால் நெஞ்சை நிமிர்த்தி தைரியமாகக் கூறமுடியும். பிழையான பாதையில் சென்று கொண்டிருந்த நாட்டின் பொருளாதாரத்தை எம்மால் சரியான பாதையில் உறுதியாக முன்னோக்கிக்கொண்டு செல்லமுடிந்துள்ளது.

பொருளாதாரத்தில் பல விடயங்களில் எம்மால் உறுதித் தன்மையை பேண முடிந்துள்ளது. ஆனால் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் எமது நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு இருந்தது என்பதை சிந்தித்துப் பாருங்கள். எனினும் நாம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து உறுதியான பொருளாதாரத்தைநோக்கிப்பயணிப்பதற்கான வழியை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம்.

நாட்டைவங்குரோத்துஅடையசெய்தவர்கள் மீண்டும் ஆளும்தரப்பை உ-ருவாக்கப் போவதாகக் கூறுகிறார்கள்.அவர்களுக்கு கனவு காண முடியும். ஆனால் அவை ஒருபோதும் நடக்கப் போவதில்லை.

சிறந்த தொழில் வாண்மை மிகுந்த அரச ஊழியர்கள் நாட்டை விட்டுச் செல்லும் நிலைமை காணப்படுகிறது. நல்லதொரு தொழில் இயலுமை மிக்கவரை அரச சேவைக்குள் உள்வாங்க முடியாத நிலைமை காணப்படுகிறது. நாம் வினைத்திறனான அரச சேவை ஒன்றிணையே எதிர்பார்க்கிறோம்.

அரச சேவையின் சம்பளம் மிகக் குறைவான மட்டத்தில் இருந்தது.அதனால் நாம் இந்த நெருக்கடிக்கு மத்தியிலும் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் நல்லதொருஅதிகரிப்பைச்செய்யவேண்டும்என நினைத்தோம். அதனைச் செய்திருக்கிறோம். தொழில் வழங்கும் கொள்கையொன்றைத் தயாரித்திருக்கிறோம். தற்போது உயர் மட்டத்தில் பெரிய நெருக்கடி இல்லை. வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புசெய்யநாங்கள் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் மீண்டும் கூட்டமாக அரச சேவைக்குள் உள்வாங்கப் போவதில்லை.

அதேபோல் நாட்டின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகவும் பொதுமக்களின் வாழ்க்கையைபாதுகாப்பதற்கும்அவசியமான நிவாரணங்களைவழங்கவேண்டும்.அதன்படி நாம்வரும்போது ஒரு ஏக்கருக்கான உரத்திற்கு வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபாவை 25 ஆயிரமாக அதிகரித்தோம். அமைச்சரவையில் வயல்களில் வளர்க்கப்படும் மேலதிக பயிர்களுக்கும் 15 ஆயிரம் உர நிவாரணத்தை வழங்குவதாகத் தீர்மானித்தோம். இதற்கு முன்னதாக வயல் விளைச்சல்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டது. வயல்களில் வளர்க்கப்படும் மேலதிக பயிர்களுக்கும் நாம் உர நிவாரணத்தை வழங்குவோம்.

அஸ்வெசும வேலைத்திட்டத்திலிருந்து விடுவிக்கப்படவிருந்த எட்டு இலட்சம் குடும்பங்களை மீண்டும் அஸ்வெசும திட்டத்திற்குள் தக்க வைக்க நடவடிக்கை எடுத்தோம். சிறுநீரக நோயாளர்களுக்கு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மாகாண அதிகாரப் பறிப்புக்கு எதிராக : இந்தியப் பிரதமரிடம் முறையிடுவோம்

## தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் கூறுகிறார்

மாகாணசபைகளின் அதிகாரங்கள் தொடர்ச்சியாக பறிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியளவில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இலங்கை தமிழரசு கட்சியினர் அவரை சந்திக்க வாய்ப்பு இருக்கின்றது.

அந்த சந்திப்பிலே முக்கியமாக இப்போதிருக்கக்கூடிய எங்களுடைய மாகாண சபை முறைமை தொடர்பாக அதில் இருக்கும் அதிகாரங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டுவருவது தொடர்பாகவும் அதனுடன் இணைந்த பல விடயங்கள் தொடர்பாகவும் அவரின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளோம்.

அதேவேளை எங்களுடைய உணர்வுகளை புரிந்துகொண்டு தேசிய ரீதியான தீர்வுக்கான முன்மொழிவை பிரதமர் மோடி அவர்கள் தற்போதைய அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்ற



கருத்தை மோடிக்கு தெரிவிப்போம். - என்றார்.

## பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த அரச அலுவலர் ஹெரோயினுடன் கைது

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் ஒருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியை சேர்ந்த 38 வயதுடைய பணி இடைநிறுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் ஆவார்.

இவர் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தராக இருந்த போது ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையாகி கிராம உத்தியோகத்தர் பதவியிலிருந்து பணி இடைநீக்கம் செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மோ. சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஏழாலை தெற்கை சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

கந்தரோடை பகுதியில் வேகமாக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சுழிபுரத்தில் இறந்தவர்களை புதைக்கும் காணியை தனியார் வாங்கியமையால் எழுந்துள்ளது சர்ச்சை

சுழிபுரம் - திருவடிநிலை பகுதியில் சடலம் புதைக்கும் காணியை தனியார் ஒருவர் வாங்கியதால் சடலத்தை புதைப்பதற்கு மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த விடயமானது வெள்ளிக்கிழமை சங்கானை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் இளைஞர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் -





காலம் காலமாக சடலங்களை புதைத்துவந்த காணியை தனியார் ஒருவர் வாங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த காணியானது யாருடைய பெயரில் இருக்கிறது என பிரதேச சபையிடம் நாங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக கோரியிருந்த போதும் அவர்கள் அதற்கு பதில் எதுவும் வழங்கவில்லை.

150 இற்கும் மேற்பட்ட சடலங்களை புதைத்த இடத்தை வாங்கிய நபர் அதில் உள்ள கல்லறைகளை இடித்துவிட்டு சுற்றுலா மையத்துக்கான கட்டடம் அமைக்கப்போவதாக கூறுகின்றார்.

அத்துடன் ரொஜீனா என்ற சிறுமி படுகொலை செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அந்த பகுதியில் குறித்த சிறுமியின் உடலம் புதைக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கானது இன்னமும் நிறைவடையவும் இல்லை.

அந்த நிலத்தை வாங்கியதாக கூறியவரிடம் நாங்கள் சென்று, எவ்வளவு பணம் என்றாலும் பிரச்சினை இல்லை, அந்த நிலத்தை நாங்கள் வாங்குகின்றோம் என கேட்டோம். ஆனால் அவர் மறுப்பு தெரிவித்தார்.

இது குறித்து பல்வேறு தரப்பினருக்கும் கடிதங்களை நாங்கள் அனுப்பியுள்ளோம். இதுவரை பதிவுத் தபாலில் அனுப்பிய கடிதங்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரை செலவிட்டுள்ளோம். ஆனால் இந்த பிரச்சனையை தீர்ப்பதாக கடிதம் அனுப்புகின்றார்களே தவிர எந்தவிதமான நேரடி விசாரணைகளுக்கும் அழைக்கவில்லை.

பொன்னாலையில் மாற்றுக்காணியை பிரதேச செயலகத்தினர் வழங்கினர். ஆனால் அந்த காணியில் ஒரு முழம் கூட தோண்ட முடியாது. அந்த நிலத்தில் சடலத்தை புதைத்தால் 15 வருடங்களானாலும் மக்கிப்போகாது.



எமது பகுதியில் இருந்து சடலத்தை அந்த பகுதிக்கு கொண்டு செல்லவேண்டும் என்றால் 25 ஆயிரம் ரூபா வாகனத்துக்கு செலவிட வேண்டும். ஆகையால் இதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன்போது குறுக்கிட்ட பொன்னாலை பகுதியைச் சேர்ந்த ஒருவர், தமது இடம் ஓர் இடுகாடு இல்லை என்றும், அங்கு சடலத்தை புதைப்பதற்கு அனுமதி வழங்கமாட்டோம். இதற்கான மாற்றுத் தீர்வினை கொண்டுவர வேண்டும். - என்றார்.

பொன்னாலையில் அந்த காணி வழங்கப்படவில்லை. மூளாய் பகுதியிலேயே வழங்கப்பட்டது என சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் கைதிகளின் பிரச்சினை வெறும் 4 மாத கால சிக்கல் அல்ல

அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால் அதனை உடனடியாக செய்ய முடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள்தான் கடந்துள்ளன. எனவே படிப்படியாக அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சூ–டுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில் வவுனியாவிற்கு வருகை தந்திருந்த அமைச்சர் இதனைத் தெரிவித்தார். பட்டலந்த வதை முகாம் போன்ற பல வதை முகாம்கள் வடக்கு, கிழக்கில் இருந்தனவே அவை தொடர்பிலும் விசாரணை நடத்துங்கள் என்று எழுப்பப்படும் குரல்களுக்கும் அவர் பதிலளித்தார்.

”பட்டலந்த வதை முகாம் மட்டுமல்ல பல வதைமுகாம்கள் இருந்தன. அவை தொடர்பில் விசாரணைகள் நிச்சயம் முன்னெடுக்கப்படும். அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களே கடந்துள்ளன.

ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் அதனைப் படிப்படியாக அதற்கான செயன்முறைகள் ஊடாகத்தான் செய்யமுடியும். காணிகள் உடனடியாகவிடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின்கைத்தொழிற்சாலைகளை மீள இயங்கு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம்.

1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பட்டலந்த வதை முகாம் மாதிரி பல வதை முகாம்கள் இருந்தன. இவ்வனைத்து முகாம்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இவ்வாறான வதை முகாம்களால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். சகல பிரச்சனைகளையும் உடனடியாக விசாரிக்க முடியாது. படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு இந்த நாட்டில் நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும்” என்றார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஜேவிபி கட்சிக்குள்ளும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்குள்ளும் மிக முக்கியமான நபர். ஆளும்தரப்பின் கொள்கை வடிவமைப்புக்களைத் தீர்மானிக்கக்கூடிய சக்தி மிக்கவர்களில் ஒருவர். அரசியல் கைதிகள், தமிழர்களுக்கு எதிரான உரிமை மீறல்கள், காணி விடுவிப்பு என்பன தொடர்பில் அவர் வழங்கியுள்ள பதில்கள் மிக மேலோட்டமானவை. தமிழ் மக்களும் தமது ஆட்சிக்கு ஆணை தந்தார்கள் என்று பெருமைகொள்ளும் ஒரு ஆளும்தரப்பிடம் இருந்து தமிழர்கள் எதிர்பார்க்கும் பதில் அல்ல இது.

அமைச்சர் சொல்வதைப் போன்று ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்புக்கு இது வெறும் 4 மாதங்களாக இருக்கலாம். ஆனால், சிறைகளில் அடைபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு இது மற்றொரு அரை வருட தண்டனைக் காலம். அவர்கள் சிறைகளில் 4 மாதங்களாக வாடவில்லை. மிக நீண்ட காலமாக, பல வருடங்களாக வாடுகின்றார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டுமே பெற்று இந்த அவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். போர் முடிந்து 15 வருடங்கள் கடந்த பின்னரும் அந்தப் போருக்கான அரசியல் காரணங்களை முன்னிறுத்தி அவர்களின் நடமாட்டச் சுதந்திரம் முற்றாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. எனவே மேலும் 4 மாதம் என்பது அவர்களுக்கு மிகக் குறுகிய காலமல்ல என்பதை அமைச்சர் கவனத்தில்கொள்ளவேண்டும்.

அரசுத் தலைவர் தேர்தலின்போதும் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று இன்றைய ஆளும்தரப்பினர் நீட்டி முழங்கினார்கள். அவர்கள் இப்போது அதனைச் செய்வதற்கு கால அவகாசம் கேட்கிறார்கள். வாக்குறுதி வழங்கும்போதே அரசியல் கைதிகளின் நிலை பற்றித் தெரியாமல்தான் வாக்குறுதி வழங்கினார்களா? நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளநிலையிலிருந்துஅவர்களைக்காப்பாற்றத்தான் அவர்களின் விடுதலை வலியுறுத்தப்படுகின்றது. அப்படியிருக்க படிப்படியாகத்தான் அதைச் செய்யமுடியும் என்ற அமைச்சரின் பதில் பொறுப்பற்றது.

இதே பதிலைத்தான் 2015இல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த ரணில் – மைத்திரி கூட்டும் தெரிவித்தது. ஆனால், கடைசியில் மிகச் சிலருக்குப் பிணை வழங்கியதைத்தவிர அவர்களாலும்அரசியல்கைதிகள்அனைவரையும் விடுவிக்க முடியவில்லை. அன்றைய ஆட்சியாளர்களும் இப்படித்தான் அதற்குக் சாக்குப் போக்குகள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது தேசிய மக்கள் சக்தியும் அதனைத்தான் சொல்கிறது.

இதுநியாயமற்றது. காலத்தை இழுத்தடிப்பது. இந்தவிவகாரங்களில் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் நீண்ட கால அனுபவம் உண்டு. காலத்தை இழுத்தடித்து கடைசியில் இந்தப் பிரச்சினையைக்கைவிடுவதையேசிங்களஆட்சிபீடங்கள்வழமையாகக் கொண்டிருக்கின்றன. இந்தத் தடவையும் அப்படி நடந்துவிடாமல் இருக்கவேண்டும் என்பதுதான் மக்களின் அங்கலாய்ப்பு. அதற்கு குறைந்தபட்சம், எந்த வழிவரைபடத்தின் கீழ், எவ்வளவு கால எல்லைக்குள் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகும் என்பதையாவது ஆளும்தரப்பினர் வெளிப்படுத்தவேண்டும். வெறும் வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்றுவதைவிடுத்து, அதனை நிவேற்றுவதற்கான அவர்களின் திட்டம் என்ன என்பதையாவது அவர்கள் வெளிப்படுத்தவேண்டும்.

# முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் அமைக்க இந்தியா ஒத்துழைக்கும்

## உரிய முறையில் அணுகுக என ரவிகரன் எம்.பி ஆலோசனை

முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் ஒன்றினை அமைப்பது தொடர்பில் தாம் இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியுடன் பேசியுள்ளதாகத் தெரிவித்துள்ள வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்திய துணைத்தூதுவருக்கு முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் ஒன்றை அமைக்கும் எண்ணம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவ்விடயத்தில் இலங்கை அரசாங்கம், இந்தியாவை உரியமுறையில் அணுகுவதன் மூலம் முல்லைத்தீவில் பண்பாட்டுநடுவம்ஒன்றைஅமைப்பதற்கான நிதி உதவியை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியுமென கூட்டுறவுப் பிரதி அமைச்சரும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஆலோசனை ஒன்றையும் வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், பண்பாட்டு நடுவம் அமைப்பது தொடர்பில் பேசப்பட்டது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இக்கூட்டத்தில் இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் ஒன்றினை அமைப்பதற்கு பல்வேறு வழிகளிலும் முயற்சிக்கின்றோம். இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களும் என்னோடு பேசியிருந்தார்.

குறித்த பண்பாட்டு நடுவத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் நிறுவுவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை எடுத்து, கலாசார அமைச்சின் ஊடாக இதற்குரிய நிதி ஒதுக்கீட்டினைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். - என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைப்பதுதொடர்பாக இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி அவர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்து பேசியுள்ளேன்.

இந்தியத்துணைத்தூதுவருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைக்கும் எண்ணமுள்ளது. அரசாங்கம் உரியவகையில் அணுகினால் முல்லைத்தீவில் பண்பாட்டு நடுவம் அமைப்பதற்கு இந்தியா நிதி உதவிகளை மேற்கொள்ளும். - என்றார்.

இதனைத்தொடர்ந்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்பாட்டு நடுவம் அமைக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தை உரிய தரப்பினர்களுக்கு அனுப்பிவைப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

# ஒட்டுசுட்டான் உணவகங்களில் திடீர் சோதனை: பாவனைக்குதவாத உணவுகள் அழிக்கப்பட்டன

ஒட்டுசுட்டான் பகுதியில் சுகாதார பரிசோதகர்களால் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது மனித பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் அழிக்கப்பட்டதுடன், உணவுக் கடைகளும் மூடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள உணவகங்களில் சுகாதார பரிசோதகர்களான லோஜிதன், டிலக்சன், நதிருசன் ஆகியோர் சனிக்கிழமை நடத்தப்பட்ட திடீர் சோதனையின் போது, உணவுக் கடையொன்றிலிருந்து மனித பாவனைக்குதவாத பத்து கிலோ கிராம் ரொட்டி, றோல்ஸ் போன்ற உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி குறித்த கடை சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்தமையும் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக குறித்த கடை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன் சுகாதாரமான முறையில் இயங்க நடவடிக்கை எடுப்பதற்கு கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கடையானது, வழங்கப்பட்ட கால அவகாசத்துக்குள் சுகாதாரமான முறையில் இயங்காவிடின் கடையின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு ஆனையிறவு என்ற பெயருடன் உலகம் முழுவதும் கிட்டும்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது 'ஆனையிறவு உப்பு' என்ற பெயருடன் உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில், மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது.

இதன்போது மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆனையிறவில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது தற்பொழுது ரஜ என்ற பெயரிலேயே வெளிவருகின்றது.

கடந்த ஆட்சி காலத்திலேயே பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. உடனடியாக அந்தப் பெயரை மாற்ற முடியாது. அதற்கென நடைமுறைகள் உள்ளன. உடனடியாக நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காகவே பழைய பெயரிலேயே விநியோகிக்கப்படுகின்றது.

வெகுவிரைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஆனையிறவு உப்பளத்தின் பெயரிலேயே இலங்கையில் மட்டும் அல்ல. உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும். இது தொடர்பில் தமக்கு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி உத்தரவாதம் வழங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# வடக்கில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்தையும் மீள தொடங்கவேண்டும்

## வடக்கு ஆளுநர் கோரிக்கை

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தை மீள ஆரம்பித்ததைப்போன்று வடக்கில் போர் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதன் ஊடாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பும் அதிகரிக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்திதொழிற்சாலையில், மேசைஉப்புஉற்பத்தியை ஆரம்பிக்கும்நிகழ்வுநேற்று(சனிக்கிழமை) இ;டம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது.

தொழிற்சாலையை விருந்தினர்கள் இணைந்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்த பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.


தேசிய உப்பு நிறுவனத்தின் தலைவர் கயான் வெல்லால தனது வரவேற்புரையில், மன்னாரில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டாலும் அதனை விட ஆனையிறவு உப்பே தரமானது எனக் குறிப்பிட்டார்.

தற்போது பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள் மூலம் மணித்தியாலத்துக்கு 5 மெற்றிக் தொன் மேசை உப்பை உற்பத்தி செய்யமுடியும் எனவும் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டிலிருந்து உப்பை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில் –

வடக்கு மாகாணத்து இளையோருக்கு வேலை வாய்ப்பை வழங்கிய பல தொழிற்சாலைகள் போரால் மூடப்பட்டுள்ளன. இதனால் வேலை வாய்ப்பின்மை எமது மாகாணத்தில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஆனையிறவு உப்பு தொழிற்சாலையை மீள முழு




வீச்சில் இயக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனையிறவு உப்புக்கு தனித்துவமான மதிப்பு இருக்கின்றது. அந்த வகையில் இதை மீளச் செயற்படுத்துவதானது சிறப்பானது. எதிர்காலத்தில் ஆனையிறவு உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது மாகாணம் மேலும் வளர்ச்சிப்பாதையில் பயணிக்கும் எனக் குறிப்பிட்டார்.

கடற்றொழில் அமைச்சர் தனது உரையில், இன்றைய நாள் உங்களுகளும், எங்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சியான நாள். பல இன்னல்களைச் சந்தித்தாலும் எமது மண்ணின் வாசத்தை பரப்பியது ஆனையிறவு உப்புத்தான். பலரும் விரும்பிப் பயன்படுத்தும் ஆனையிறவு மேசை உப்பு மீண்டும் உங்கள் கைகளுக்கு வரப்போகின்றது. ஆனையிறவு உப்புக்கு தனியான 'மவுசு' உண்டு. விரைவில் ஆனையிறவு உப்பு என்ற பெயரில் உலகமெங்கு இது விற்பனையாகும், என்று குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, இன்றைய நாள் எல்லோருக்கும் மகிழ்ச்சிக்குரிய நாள். எமது அரசாங்கம் பதவிக்கு வந்த 5 மாதங்களில் இந்த தொழிற்சாலையை திறந்து வைத்திருக்கின்றோம். கடந்த காலங்களில் இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பை வேறு தரப்புக்கள் கொள்வனவு செய்து வெள;வேறு பெயர்களில் விற்பனை செய்தார்கள். இப்போது இங்கிருந்தே மக்களுக்கு உப்பை விற்பனை செய்யும் வகையில் நாம் மாற்றியமைத்துள்ளோம். – என்றார். 316



# வதை முகாம்கள் குறித்த விசாரணை இடம்பெறும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க வவுனியாவில் தெரிவிப்பு



பட்டலந்த வதை முகாம் மட்டுமல்ல பல வதைமுகாம்கள் இருந்தன. அவை தொடர்பில் விசாரணைகள்இடம்பெறும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்மற்றும்சிவில் விமானசேவைகள்அமைச்சர் மற்றும்நாடாளுமன்ற சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்கதெரிவித்துள்ளார்.

வவுனியா, குடியிருப்பு பகுதியில் நேற்று (சனிக்கிழமை) தேசியமக்கள் சக்தியின்உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை சந்தித்து கலந்துரையாடிய பின் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைளை முன்னெடுப்பது, அவர்களது நடவடிக்ககைகள் மற்றும் கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பாக இங்கு பேசப்பட்டது. மூன்று வருடத்திற்கு முன்னர் நடந்த வேண்டிய இந்த தேர்தலை நாம் ஆட்சிக்கு வந்தவுடனேயே நடத்துகின்றோம். அரசாங்கம் ஒவ்வொரு செயற்பாடுகளையும் கட்டம் கட்டமாக செய்து வருகின்றது.

அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஆனால்அதனைஉடனடியாகசெய்யமுடியாது. நாம் ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் தான் ஆகியுள்ளன. ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தாலும் அதனை படிப்படியாக அதற்கான செயன்முறைகள் ஊடாகத் தான் செய்ய முடியும். காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளன. வடக்கின் கைத் தொழிற்சாலைகளை மீள இயங்கு நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். எமது அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் கூட முன்னைய அரசாங்கங்கள் ஒதுக்காத அளவு அதிக நிதியை நாம் வடக்கிற்கு ஒதுக்கியுள்ளோம். ஆகவே சில நடைமுறைகளை பின்பற்றித் தான் செய்ய வேண்டும். அந்த நடைமுறைகளின் பிரகாரம்அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்.

பட்டலந்த போன்று பல வதை முகாம்கள் அந்தக் கலப்பகுதியில் இருந்துள்ளன. 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படலந்த வதை முகாம் மாதிரி பல வதை முகாம்கள் இருந்தன. தெற்கில் ஜேவிபி, யுஎன்பி பிரிந்து இருந்தது போன்று, வடக்கு - கிழக்கில் எல்ரீரீஈ; புளொட், ஈபிடிபி, ஈபிஆர்எல்எப், ரெலோ என பிரிந்து செயற்பட்டு இருந்தார்கள். வதை முகாம்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என எல்லோருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். முதல் கட்டமாக எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் பட்டலந்த வதைமுகாம் விவாதம் ஆரம்பிக்கப்படும்.

எல்லாப் பிரச்சினைகளையும் உடனடியாக விசாரிக்க முடியாது. படிப்படியாக முன்னெடுக் கப்பட்டு இந்த நாட்டில் ஒரு நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார். 100




# இப்தார் நிகழ்வுகள்

(றபாயிஸ்)

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பால் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகப் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித்தின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் எம்.எஸ்.எம். ஸாகிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் டாக்டர் அல்-ஹாஜ் எம்.எச்கே.சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ் கௌரவ அதிதியாகவும், சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசல் தலைவர் ஓய்வுபெற்ற பொறியியலாளர் யூ.எல்.எம். அஜிஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டதுடன், ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் செய்தி முகாமையாளர் ஏ.எச்.எம்.ஹாரீஸ், பிராந்திய முகாமையாளர் எம்.ஏ.எச்.அஸ்ரி, உறுப்பினர் ஏ.கே.ஹஸான் அஹம்மட், பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊடக அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், பிராந்திய செய்தியாளர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி எட். எம் றஹ்மத்துல்லாஹ் மௌலவி விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உறுப்பினர் எம்.எச்.எம்.சிப்ஹான் இப்தார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியதுடன், நன்றியுரையினை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உதவி முகாமையாளர் மஹ்ரூப்.எம்.ஜபீர் நிகழ்த்தினார்.

இதன் போது கலந்து கொண்ட பிரதம அதிதி, கௌரவ அதிதி மற்றும் விசேட அதிதி ஆகியோர்களுக்கு ஸ்கை தமிழ் குடும்பத்தினால் நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



(சியாஜ்)

புத்தளம் தில்லையடி ரத்மல்யாய அல்-இக்ராமிஹிரெச மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அண்மையில் அதன் காரியாலயத்தில் இடம்பெற்றது.

தில்லையடி ரத்மல்யாய வை. எம்.எம்.ஏ நகரில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் இந்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், கிராம அதிகாரிகள் மற்றும் பள்ளி வாசல் நிர்வாக அங்கத்தவர்கள், சமூக சேவை சங்கங்களின் அங்கத்தவர்கள், மகளிர் சங்க அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த இப்தார் நிகழ்வுகள் பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்தது.



காலைக்கதிர் Kalaikkathir

# இன ஐக்கியத்திற்கான இப்தார் நிகழ்வும் துறைசார் சேவையாளர்கள் கௌரவிப்பும்

(றமீஸ்)

அம்பாறை மாவட்ட சமாதான நீதிவான் சங்கமும் அக்கரைப்பற்று-கல்முனை சாரணர் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இன ஐக்கியத்திற்கான இப்தார் நிகழ்வும் கௌரவிப்பு வைபவமும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

சமாதான நீதிவான்கள் சங்கத்தின் தலைவரும் ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல்.எம் ஹாஸீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களான இப்னு அசார், நுவன் தந்த நாராயண, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லா, நீர்ப்பாசன திணைக்களத்தின் சிரேஷ்ட பொறியலாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாய் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உதவித் தலைவரும், சாரணர் அமைப்பின் உதவி மாவட்ட ஆணையாளருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எட்றிபாஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று ஜம்இயத்துல் உலமா சபையின் உபதலைவர் என்,ரீ,சர்ஜூன்





றஹ்மானி விஷேட சொற்பொழிவை நிகழ்த்தினார்.

இதன்போது இன நல்லிணக்கம், சமூக சேவைகள் மற்றும் அரச சேவைகள் போன்றவற்றில் தன்னை அர்ப்பணித்து சேவை புரிந்த துறைசார் முக்கியஸ்தர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இயக்கச்சியில் பனை மரங்களை அழித்தோர் மீது சட்ட நடவடிக்கை

(சுபேசன்)



பளைப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் நூற்றுக்கணக்கான பனை மரங்களை எந்தவொரு அனுமதியும் இன்றி பிடுங்கி அழித்தவர்கள் மீது பனை அபிவிருத்திச்சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆலயக் காணி ஒன்றில் காணப்பட்ட பனை மரங்களே இவ்வாறு அனுமதி இன்றி சட்டவிரோதமாக அழிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் வியாழக்கிழமை பளைப் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுபதிவுசெய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்; –

இயக்கச்சிப்பகுதியில்அதிகளவான பனை மரங்கள் எந்தவொரு அனுமதியும்இன்றிதன்னிச்சையான அழிக்கப்பட்டுள்ளது. இது மிக மோசமானசெயற்பாடு.இதுதொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை வளத்தை அழிப்பவர்கள் தொடர்பாக பொது மக்கள் பனைஅபிவிருத்திச்சபைக்குஅல்லது பிரதேச செயலகத்திற்கு முறைப்பாடு வழங்க முன்வர வேண்டும்.

நாம் மிக சிரமப்பட்டு பனை வளத்தை மீட்டெடுத்து வருகிறோம். அதற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான சில செயற்பாடுகள் காணப்படுகின்றன.

பனை வளத்தை அழிப்பவர்கள் யாராக இருந்தாலும் இரக்கம் காட்டப்படமாட்டாது.அவர்கள்சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். – என மேலும் அவர் தெரிவித்திருந்தா

# தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(இல்சாத் பர்வீஸ்)

வியாழக்கிழமை சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 27 பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அத்தோடு மேலும் கைது செய்யப்பட்ட ஏனைய 25 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேலும் கைதுசெய்யப்பட்ட ஏனைய 25 பேரை பிணையில் விடுதலை செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளரான மதுஷான் சந்திரஜித் உட்பட இருவரையும் விடுதலை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று மாலை 06.30 மணி முதல் 7.30 மணிவரை பல்கலைக் கழகத்திற்கு முன்பாக கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.










## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்தக் கொடுப்பனவு வழங்கியுள்ளோம். நாங்கள் ஓய்வூதியத் தொகையை 3000 ரூபாவினால் அதிகரித்தோம். மகாபொலவை 2500 ரூபாவினால் அதிகரித்திருக்கிறோம். புலமைப்பரிசில் கொடுப்பனவை 6500 ரூபாவாக அதிகரித்தோம். அதேபோல் நிலையங்களுக்குள்வசிக்கும்பிள்ளைகளுக்கு அதாவது பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு 5000 கொடுப்பனவு வழங்கவும் 3000 ரூபாவை அவர்களின் நிலையான கணக்கில் வைப்புச் செய்யவும் நாம் தீர்மானித்திருக்கிறோம். மாதாந்தம் அவர்களின் நிலையான வைப்புக்காக 3000 ரூபாய் வழங்குகிறோம். அந்த அநாதை பிள்ளைகள் திருமணம் ஆகின்றபோது கொடுப்பனவை குறிப்பாக பெண் பிள்ளைகள் திருமணம் செய்கின்றபோது அவருக்கு வீடொன்றை கட்டிக்கொள்ள 10 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொடுப்போம். இல்லாவிட்டால் அவர்களை யார் பார்ப்பது? பாலர் பாடசாலை மாணவர்களுக்கு 60 ரூபாயாக இருந்த உணவுக் கொடுப்பனவை 100 ரூபாயாக அதிகரித்தோம்.

எனக்கும் எந்தவொரு அமைச்சருக்கும் தனிப்பட்ட இலட்சியங்கள் இல்லை. எமது அதிகார தரப்பு மக்களுடைய பணத்தில் ஒரு சதமேனும் திருடமாட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். உயர் மட்டத்தில் மாத்திரம் ஊழல் லஞ்சத்தை நிறுத்தினால் போதாது. மக்களினது பணத்தை கொள்ளையடிக்காத பிரதேசபைகள் உருவாக்கபடவேண்டும். அப்போதே இந்த மாற்றத்தை தேசிய ரீதியாகவும் கிராம மட்டங்களிலும் கொண்டு செல்லலாம்.

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி மிகவும் முக்கியமானதொரு தேர்தலாகும். நாட்டை முன்னோக்கி நகர்த்தும் இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கே பெற்று தரவேண்டும் எனவே அனைவரும் தயாராக இருங்கள் - என்றார்.

## ஆனையிறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பொருளாதார அடையாளங்களுள் ஒன்றான ஆனையிறவு உப்பளத்தை மீள ஆரம்பித்தமை காலத்தேவையான செயற்பாடாகும். 1937ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஆனையிறவு உப்பளத்தில் 1938ஆம் ஆண்டில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் ஏறத்தாழ ஒன்பது தசாப்த பாரம்பரியம் மிக்க ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகள் சனிக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளித்தாலும், 'ஆனையிறவு உப்பு' என்ற அடையாளப் பெயர் 'ரஜ லுணு' என மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிடைக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் கைத்தொழிற் பேட்டைகளுள் முதன்மையானதும், முக்கியத்துவம் மிக்கதுமான ஆனையிறவு உப்பளம் என்பது எமது மக்களின் அடிப்படை வாழ்வியலோடு இணைந்த ஓர் அடையாளம் ஆகும். அத்தகையதோர் கைத்தொழிற் கட்டமைப்பை மீள ஆரம்பிக்கும்போது அதன் அடிப்படை அடையாளத்தை மாற்றம் செய்கின்றமை தங்கள் ஆளும்தரப்பின் மீதான அபிமானத்தையும், இன நல்லிணக்கம் குறித்த தங்களின் சிந்தனைப் போக்கையும் கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் இனத்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அடையாளத் திணிப்புகளைப் போலவே, எமது மொழியியல் அடையாளத்தை சிதைத்து, பெரும்பான்மையினத்தின் தனித்துவத்தை வலிந்து புகுத்தும் இன மேலாதிக்கச் செயற்பாடாகவே இதனையும் கருத வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

2025.03.18 அன்று, நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 22.7 இன் கீழ், ஆனையிறவு உப்பளம் குறித்து நாடாளுமன்றில் நான் கேள்வி எழுப்பியபோது வலியுறுத்தியதற்கு அமைவாகவும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்பவும் ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பினை 'ஆனையிறவு உப்பு' என்ற பாரம்பரிய பெயருடனேயே விற்பனை செய்வதை உறுதிசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புஷ்பகுமார தெரிவித்தார்.

மேலும், உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்பான அதிகாரப்பூர்வ தேர்தல் அறிவிப்புகள் மற்றும் வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக கடந்த நாளில் தேர்தல் விதி மீறல்கள் மற்றும் வன்முறைச் செயல்கள் தொடர்பாக 7 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவற்றில் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பான 6 முறைப்பாடுகளும், வன்முறைச் செயல்கள் தொடர்பான ஒரு முறைப்பாடும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## போராட்டங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்த ஆளும்தரப்பு எந்த வேலையும் செய்ய முடியாமல் பொய், தவறாக வழிநடத்துதல், ஏமாற்றுதல், பிரச்சினைகளைத் தவிர்த்தல் போன்றவற்றையே தொடர்ந்து செய்துவருகிறது. மின்சாரம் தடைபடுவதற்கும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கும் குரங்குகள் காரணமாம்.

நாய்களே சோறு உண்பதும், நாட்டு மக்கள் தோங்காய் சம்பலையும் சோற்றையும் அதிகமாக உண்பதுமே அரிசி தட்டுப்பாட்டுக்கு காரணம் என தெரிவித்திருக்கின்றனர். உணவும் இந்த ஆளும்தரப்புக்குப் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இவை பொறுப்பற்ற பேச்சு. இவை மக்கள் ஆணையை குறைமதிப்பிற்குட்படுத்தும் பேச்சு.

இவ்வாறு பொறுப்பற்ற சில்லறைத்தனமான பதில்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். மூன்று வேளைபோக, ஒரு வேளையும் சாப்பிட முடியாத மக்களும் காணப்படுகின்றனர். இது தவிர உணவுப்பொருட்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பொருட்களுக்கு வரிக்கு மேல் வரி அறவிடுகின்றனர். மறுபுறத்தில் வேலையற்ற பட்டதாரிகளை ஏமாற்றி வருகின்றனர்.

கொரோனா காலகட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க அபிவிருத்தி உத்தியோகத்தகர்கள் கடமையில் ஈடுபட்டனர். கல்வி அமைச்சுக்கு முன்பாக இவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, அவர்கள் அடித்துவிரட்டப்பட்டுள்ளனர். வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்களின் ஸ்தாபகர்களாக இருந்த தற்போதைய ஆளுந்தரப்பினர், இன்று ஆட்சிக்கு வந்தவுடன் இவற்றைத் தடைசெய்ய முற்பட்டுவருகின்றனர். ஜனநாயக உரிமைகளுக்காக குரல் எழுப்பிவதும் இப்போது தவறாக பார்க்கப்படுகின்றது - என்றார்.

## அரச சொத்துக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். தேர்தல் ஆணைக்குழுவினால் இது குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய அரச அதிகாரிகள் தமது சேவை நேரத்தில் வேட்பாளர்கள் தொடர்பான பரப்புரைகளை முன்னெடுப்பது சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அதேபோன்று ஏதேனும் அரச நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும்போது அவை எந்தவகையிலும் எந்தவொரு வேட்பாளருக்குமான பரப்புரையாக அமைந்துவிடக்கூடாது. இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பகங்கள் உன்னிப்பாக அவதானம் செலுத்தும். அரசமைப்பிற்கமைய இது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு காணப்படுகிறது.

அரசவாகனங்களைப் பயன்படுத்துவதிலும் வரையறைகள் காணப்படுகின்றன. அரச தேவைகளுக்கு மாத்திரமே அவை பயன்படுத்தப்பட வேண்டும். மாறாக தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்தப்பட்டால் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அது மாத்திரமின்றி குறித்த வாகனத்துக்கு உரித்துடையவர்களே அதற்கான பொறுப்பினையும் ஏற்கவேண்டும்.

தேர்தலுக்கான அலுவலகங்களை அமைப்பதற்குக் கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், மத வழிபாட்டு தலங்களிலோ அரச கட்டடங்களிலோ அவற்றை அமைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் தேர்தலுக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் இந்த அலுவலகங்கள் நீக்கப்படவேண்டும். தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பில் வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார்.

## எய்ட்ஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்.ஐ.வி. தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் 'எய்ட்ஸ்' தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் இலங்கையில் 824 பேருக்கு எச்.ஐ.வி தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 718 பேர் ஆண்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் 47 பேர் எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்தனர்.

இலங்கையில் எச்.ஐ.வி. பரவல் அதிகரித்து வருவதனால், உடனடியாக பரிசோதனை செய்துக்கொள்ளுமாறு தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

## நான் ஒரு அப்பக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் எரங்க வீரரத்ன, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் ஜனித் கொடிதுவக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் யாழ்.மாவட்ட பொறியியலாளர்கள், பொறியியல் துறைசார் வல்லுனர்கள், பேராசிரியர்கள் , கல்வியலாளார்கள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய வலுச் சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தங்கு தடையின்றி 24 மணிநேர மின்சாரத்தை வழங்குவதுதமது ஆளும்தரப்பின் நோக்கமாக உள்ளது என்று தனது உரையின் நடுவே தெரிவித்திருந்தார்.

அவர் அப்படி உரையாற்றி அமர்ந்த சில நிமிடங்களிலேயே அங்கு மின்சாரம் தடைப்பட்டது. இதனால், 24 மணி நேர மின்சாரம் என்று அமைச்சர் சொன்னவுடனேயே மின் தடை என்கிற வகையில் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் சிலர் தமது சமூக வலைத்தளப் பக்கங்களில் பதிவிட்டனர்.

இந்நிலையில் ஊடகவியலாளர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு விரைந்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ''நான் ஒன்றும் அப்பக் கோப்பை அல்ல, அனைவரும் இணைந்து மின் ஆழியை நிறுத்தினால் மின்சாரம் நின்றுதான்போகும்'' என்று ஊடகவியலாளர்களைப் பார்த்துச் சீறினார்.

இந்நிலையில் சிறிது நேரத்தின் பின்னர் மீண்டும் திடீரென ஊடகவியலாளர்கள் அமர்ந்திருந்தபகுதிக்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மின் தடை ஏற்பட்டமையை ''மின்சார சபை உறுதிப்படுத்தியது'' எனவும் ''தெரியாது பேசிவிட்டேன்'' எனவும் கூறி ஊடகவியலாளர்களைச் சமாளிக்க-முயன்றார்.

அதற்கு ஊடகவியலாளர்கள், நாமும் மின்சார சபையுடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திவிட்டுத்தான் அந்தத் தகவலைப் பகிர்ந்திருந்தோம் என்று பதிலளித்தனர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# ஏ – 35 பிரதான வீதி புளியம்பொக்கனை பகுதியில் பயணித்த பெண்ணிடம் தங்கச் சங்கிலி அபகரிப்பு

கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ 35 பிரதான வீதி ஊடாக பரந்தன் பெரியகுளம் கிராம அலுவலர் பகுதியில் அமைந்துள்ள தனது வீட்டுக்கு பயணித்து கொண்டிருந்த பொழுது புளியம்பொக்கனை பகுதி மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணிடம் அதே பகுதியில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீதியால் பயணித்த பெண் அணிந்திருந்த மூன்று லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலீஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக் கமைய விரைவாக செயற்பட்ட தர்மபுர பொலீஸார் சந்தேக நபரை துரத்திச் சென்று இராமநாதபுரம் பகுதியில் வைத்து இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.



கைதுசெய்யப்பட்ட சந்தேகங்களிடமிருந்து பெண்ணிடம் அபகரிக்கப்பட்ட தங்கச் சங்கிலி மற்றும் அவர்களின் உடைமையில் இருந்து 2.25 மில்லிகிராம் கெராயினும் 20 கிராம் கேரளா கஞ்சாவும் திருட்டில் ஈடுபடுவதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

தடயப் பொருள்கள் மற்றும் சந்தேக நபரை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்திய பொழுது மேலதிக விசாரணைகளுக்காக மீண்டும் இரண்டு சந்தேக நபர்களையும் மீண்டும் தர்மபுரம் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். 316

# அக்கரைப்பற்று டியூட்டரிகளில் வகுப்புகள் இடை நிறுத்தம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)



அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களின் கல்விச் செயற்பாடுகளை 2025.03.25 ஆம் திகதி தொடக்கம் 2025.04.15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அக்கரைப் பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் அவர்கள் 24 ஆம் திகதியன்று வெளியிட்டுள்ள விஷேட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள், சமூக அமைப்புக்கள் மற்றும் சமய நிறுவனங்களின் முறையீடுகள் மற்றும் கோரிக்கைகளுக்கு அமைவாக, எதிர்வரும் பண்டிகைகள் மற்றும் சமய அனுஸ்டானங்களுக்கு இடம் கொடுக்கும் முகமாக அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்படி குறித்த காலப்பகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்,

மேலும், இம்முறை கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா-தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கடந்த காலங்களில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பரீட்சைக்குத் தோற்றியமையால் ஏற்பட்டுள்ள உடல் உள அழுத்தங்களுக்கு ஆறுதலளிக்கும் வகையிலும் க.பொ.த. உயர்தர கல்விக்கான துறையை அவர்கள் சுயமாக தீர்மானம் எடுப்பதற்கும் இடமளித்து புதிய ஆண்டுக்கான க.பொ.த உயர்தரத்திற்கான கல்விச் செயற்பாடுகளை 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை காலதாமதம் செய்யுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தொழில்மைய கற்கைத் துறைகளாக உயர் தரத்தில் கலைத்துறை பாடநெறி

## வேலையில்லாப் பிரச்சினைக்குபுதிய தீர்வு

க.பொ.த.உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவுசெய்து கல்விகற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகி பட்டக் கல்வியை நிறைவுசெய்தாலும் வேலையற்ற பட்டதாரிகளாக இருக்கும் நிலைமைக்குத் தீர்வுகாண சிகரம் நிறுவனம் புதிய திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்கும்போதே, தொழில்மையமாக பொருத்தமான பாடத்தெரிவுகளை மேற்கொள்ள அவர்களுக்கு வழிகாட்டி, அந்தந்தத் துறைகளில் அவர்களுக்குக் கற்பிப்பதன் மூலம் இதனைச் சாதிக்கும் திட்டத்தை, தனது 15 வருட கல்வி-தொழில் வழிகாட்டி சேவை மற்றும் தொழிற்கல்வி, வேலைவாய்ப்புச் சேவை அனுபவங்களின் மூலம் சிகரம் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பொறியியலாளர், மருத்துவர், முகாமையாளர் என்று நீளும் வழமையாக அனைவரும் பொதுவாக எதிர்பார்க்கும் தொழில்வாய்ப்புக்களுக்கு ஈடாக, ஊடகவியலாளர், கணினி வரைகலைஞர், வீடியோ ஒளிப்படவியலாளர், சினிமா கலைஞர், சமையல் கலைஞர், ஆடை வடிவமைப்பாளர், விருந்தோம்பல்துறை பணியாளர்கள், வழக்கறிஞர் என்று கவர்ச்சியான வருமானத்துடன், சமுதாயத்தின் அடிப்படையான பல தேவைகளை நிறைவு செய்யும் ஏராளம் தொழில்களைப் பெற உதவும் பொருத்தமான கலை-வர்த்தக பாடச் சேர்மானங்கள் மூலம் முற்றிலும் புதிய அணுகுமுறையை சிகரம் நிறுவனம், மானிடப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளை பலப்படுத்தும் தனது 'கலைத்துறை மற்றும் தொழில்வாண்மையான கற்கைப் பிரிவு' ஊடாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

உயர்தரக் கலைத்துறைப் பாடங்களை அடிப்படையாகக் கொண்டு, தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் துறை, விருந்தோம்பல் மற்றும் வடிமைப்புத் துறை, அழகியல், கலை-இலக்கிய கற்கைகள் துறை, வர்த்தகம் சந்தைப்படுத்தல் கற்கைகள் துறை, சட்ட கற்கைகள் துறை, பொதுச்சேவை – அபிவிருத்தி கற்கைகள் துறை என்று 6 தொழில்மையமான கற்கைகள் துறைகளாக கலைத்துறை பாடங்களை சிகரம் நிறுவனம் வகைப்படுத்தியுள்ளது.

இவற்றில் மாணவர்களுக்கு அதிகம் பொருத்தமான துறையை அவர்களது இயல்பான ஆற்றல், ஆர்வம், இயல்தகைமை என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்வதற்குத் தேவையான வாழ்க்கைத் தொழில் உளவியல் பகுப்பாய்வு மதிப்பீட்டைச் செய்து, அவரவருக்குப் பொருத்தமான துறைகளில் மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்து, அதிக இசட் புள்ளிகளுடன் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவும், கௌரவமான வருமானத்துடன் தொழில்வாய்ப்புக்களைப் பெறவும் சிகரம் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது,

இதன் மூலம், மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியதுமே தொழில் ஒன்றில் இணைந்துகொள்வதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வதுடன், பல்கலைக்கழக அனுமதி கிடைத்தால் பகுதிநேரமாக தொழில்செய்துகொண்டு பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரவும், கிடைக்காவிட்டால் முழுநேரமாகத் தொழில்செய்துகொண்டு பகுதிநேரமாக வெளிவாரிப் பட்டக்கல்வியைத் தொடர்வதற்கும் மாணவர்களால் இயலுமாக இருக்கும் என, சிகரம் நிறுவனத்தின் நிறுவுநரும், நிறைவேற்றுப் பணிப்பாளருமான கோடீஸ்வரன் றுஷாங்கன் இது தொடர்பில் யாழ் விருந்தினர் விடுதி ஒன்றில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் விளக்கமளித்தார்.

வடக்கு மாகாணத்தில் 15 வருடங்களுக்கு மேலாக கல்வி-தொழில் வழிகாட்டி சேவையை வழங்கி, கருத்தரங்குகள் மூலமாகவும், சிகரம் இளையோர் மாதாந்த சஞ்சிகை, பிரசுரங்கள், இலங்கையிலேயே முன்முதலாக தமிழ் மொழியில் வெளியிடப்பட்ட கல்வி-தொழில் வழிகாட்டி கையேடு என்பவற்றின் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தொழில்மையமான கல்விக்கான வழிகாட்டலை வழங்கி, நூற்றுக்கணக்கானவர்களுக்கு நேரடித் தொழிற்பயிற்சிகளின் மூலம் உள்நாட்டு - வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்து,

ஒரு தனியார் தொழில் முயற்சியாக இந்தச் சேவையை வழங்கியமையைக் கௌரவித்து இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளத்தினால் தொழில் முனைவோருக்கான விருதையும் பெற்ற அனுபவத்துடன், சிகரம் நிறுவனம், கலைத்துறை மாணவர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்கான இந்தப் புத்திபூர்வமான நடைமுறைத் தீர்வை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி செயலகத்தில் தக்காளி அறுவடை நிகழ்வு

யுஎண்டிபி நிறுவனத்தின் நவீன விவசாயத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட தக்காளி செய்கையை மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரனின் வழிகாட்டலின் கீழ் ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த தக்காளி செய்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த தக்காளி செய்கையை வெற்றிகரமாக மேற்கொண்டு வெள்ளிக்கிழமை அறுவடை இடம்பெற்றது. மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், கலந்து கொண்டு அறுவடை செய்தனர். 31








| | | | |
|---|---|---|---|
| HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 | HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) | 4 | HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) | 8 |
| 3U DVR CABINET | 1 | 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) | 1 | SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) | 4 | 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) | 8 |
| METAL BNC CONNECTOR | 8 | METAL BNC CONNECTOR | 16 |
| | 1 | | 1 |
| **Rs. 48000.00** | | **Rs. 69000.00** | |

| | | | |
|---|---|---|---|
| HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 | HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) | 4 | HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) | 8 |
| 3U DVR CABINET | 1 | 3U DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) | 1 | SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) | 4 | 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) | 8 |
| METAL BNC CONNECTOR | 8 | METAL BNC CONNECTOR | 16 |
| | 1 | | 1 |
| **Rs. 52000.00** | | **Rs. 82000.00** | |

| | | | |
|---|---|---|---|
| HIKVISION DVR IDS-7104HGHI-M1/S (02 YEARS WARRANTY) | 1 | HIKVISION DVR IDS-7108HGHI-M1/S (02 YEARS WARRANTY) | 1 |
| HIKVISION CAMERA DS-2CE10DF3T-LPFS (02 YEARS WARRANTY) | 4 | HIKVISION CAMERA DS-2CE10KF0T-LPFS (02 YEARS WARRANTY) | 8 |
| 3U 400MM DVR CABINET | 1 | 3U 400MM DVR CABINET | 1 |
| SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) | 1 | SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) | 1 |
| 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) | 4 | 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) | 8 |
| METAL BNC CONNECTOR | 8 | METAL BNC CONNECTOR | 16 |
| | 1 | | 1 |
| **Rs. 68000.00** | | **Rs. 113000.00** | |

Follow us: facebook/nalin it www.nalinit.lk nalin@nit.lk

| | | |
|---|---|---|
| JAFFNA | 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. | 077 766 7975 / 021 222 1121 |
| KILINOCHCHI | No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. | 076 359 7610 / 021 228 5550 |
| MANNAR | No.208A, Hospital Road, Mannar. | 076 359 4368 / 023 222 2500 |
| NALIN IT EXCLUSIVE | No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) | 076 359 4359 / 021 221 0404 |

* நிபந்தனைக்குட்பட்டது.

# பிரிட்டனில் பிழை கண்டுபிடிக்க முன் அரசமைப்பு பணியை ஆரம்பியுங்கள்

## விஜிதவுக்கு மனோ அறிவுரை

பிரிட்டன் அரசாங்கம் சார்பாக பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி அறிவித்த தடைகள், இலங்கையில் தேசிய நல்லிணக்க செயற்பாட்டை குழப்புகிறது என இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகிறார். டேவிட் லெம்மி, தான் இதை தம் தேர்தல் பிரசாரத்தின் போது தந்த வாக்குறுதிகளுக்கு ஏற்பவே செய்துள்ளதாகவும் கூறுகிறார்.

இந்நிலையில் நண்பர் விஜித ஹேரத்திடம் நான் கேட்க விரும்புகிறேன். உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதியளித்த, அரசமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? இன்று இந்நாட்டில் இனவாதம் பகிரங்கமாக பேசப்படுவதில்லை. அதற்கு காரணம் ஜேவிபி அல்ல. அன்று நாட்டில் நடைபெற்ற 'அரகல' என்ற போராட்டத்தின் போது, அதற்கு முன் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த பெரும்பாலான சிங்கள இளையோர், இனி இனவாதம் சரி வாராது என்று கை விட்டு விட்டார்கள். அது நல்லது. ஆனால், அது மட்டும் நிரந்தர நல்லிணக்கத்தை கொண்டு வராது. நிலைமை மீண்டும் மாறலாம். ஆகவே காலம் கடக்கும் முன், நீங்கள் உறுதி அளித்தபடி, நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடைநிறுத்தப்பட்ட, புதிய அரசமைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுங்கள். அதை தானே நீங்கள் உங்கள்



தேர்தல் விஞ்ஞாபனத்தில், பிரசாரத்தில் சொல்லி வாக்கு வாங்கினீர்கள்? அதை செய்யாமல், இன்று நடக்காத உங்கள் தேசிய நல்லிணக்க செயற்பாட்டை, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி தடைகளை அறிவித்து குழப்புவதாக கூறுவது வேடிக்கை என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில், தனது எக்ஸ் தளத்தில் மனோ எம்.பி. தெரிவித்தவை வருமாறு -

'பொறுப்பு கூற வேண்டியவர்கள் சட்ட விலக்கு பெற இடம் தர மாட்டோம்' என்ற தமது தேர்தல் பிரசார வாக்குறுதிக்கு அமைவாக, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி, இலங்கையின் பிரஜைகள் நால்வருக்கு எதிராக அறிவித்த தடைகள் இலங்கையின் தேசிய நல்லிணக்க முயற்சிகளை குழப்புவதாக தனது 'அங்கேயும் இல்லாத, இங்கேயும் இல்லாத' பதிலில் இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகிறார்.

அமைச்சர் அவர்களே, உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதியளித்த, அரசமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? அதை உங்களை அரசு காலவரையின்றி ஒத்தி வைத்து விட்டது. நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடைநிறுத்தப்பட்ட, புதிய அரசமைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுப்போம் என்பது உங்கள் தேர்தல் கால வாக்குறுதி. ஜனாதிபதி அனுரகுமார உடன், அந்த புதிய அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் நான், நண்பர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், சுமந்திரன் ஆகியோர் கூட்டாக செயற்பட்டோம்.

ஆகவே காலதாமதம் ஏற்பட முன், உடனடியாக புதிய அரசமைப்பு பணியை ஆரம்பித்து தேசிய நல்லிணக்க இலங்கை அடையுங்கள். அதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நீங்கள் தர கூடிய சரியான பதிலாக இருக்க முடியும். - என்றுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# பெண்கள் எதிர்நோக்கும் சமூகமட்ட பிரச்சனைகள் குறித்த கலந்தாய்வு

(சுபேசன்)

பெண்கள் எதிர்நோக்கின்ற சமூகமட்டப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் -திருநெல்வேலிப் பகுதியில் விழுது நிறுவன நிகழ்ச்சித்திட்ட அதிகாரி இந்துமதி ஹரிஹர தாமோதரன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

விழுது நிறுவனம் மற்றும் இலங்கையில் சமூக ஒருமைப்பாடு மற்றும் சமாதானத்தை வலுப்படுத்தல் ஆகிய அமைப்புகள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் பெடரல் வெளிநாட்டு அலுவலகம் ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்த செயற்திட்டத்தின் கீழ் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இதன்போது அரசியலில் உட்பிரவேசிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்,நுண்நிதி







கடன்களால் பெண்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள், இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற போதைப்பொருள் பாவனையால் சமூக மட்டத்திலும் - குடும்பங்களிலும் ஏற்படுகின்ற வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கின்ற வாழ்வாதார பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன், மருத்துவ பீடாதிபதி சுரேந்திரகுமாரன், டாக்டர் ஜீவகாந்தன், டாக்டர் கமலகுமாரி கருணாநிதி, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், போதைப்பொருள் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள்,

அமரா பெண் தலைமைக் குடும்பப் பெண்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ். மாவட்ட சமாச அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நிந்தவூரில் விபத்து இருவர் படுகாயம்

(தில்சாத் பர்வீஸ்)

நிந்தவூர் பிரதான வீதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நிந்தவூர் பிரதான வீதியில் இலங்கை வங்கிக்கு முன்பாக இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதால் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2025இல் வெளியிடப்பெற்றது